**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII code of Criminal Procedure)
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**Cr.M.P.NO-362/2025**

**Examination of PW2**

| | | | |
|---|---|---|---|
| Name | கருப்புசாமி | Age: | 43 |
| Father's name | மணி | Calling: | ஓட்டுநர் |
| Village | அரவம்பட்டி | Taluk | கந்தர்வக்கோட்டை |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 03.11.2025

முதல் விசாரணை

1) கடந்த 21.10.2024 ஆம் தேதி, காலை 8.00 முதல் 09.00 மணிக்குள், வாண்டாம்பட்டி ரோட்டின் அருகில் உள்ள தங்கதுரை கொல்லைக்கு குளிக்கச்சென்றேன். அப்போது, ஆசைத்தம்பிக்கும், தங்கதுரைக்கும் இடையே சண்டை நடந்தது. நான் சென்று பார்த்த போது, ஆசைத்தம்பி மற்றும் அவரது குடும்பத்தாரும் கட்டையால் தங்கத்துரையை தாக்கியதில் அவர் மயக்கமடைந்தார். அவரை கந்தர்வக்கோட்டை அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்த்தோம். மருத்துவர் கந்தர்வக்கோட்டை காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தார். தகவல் அறிந்து காவலர் செல்வம் மற்றும் பெயர் தெரியாத மற்றொரு காவலர் மருத்துவமனை வந்து விசாரணை நடத்தினார்கள். அன்றைய தினம் மாலை இருதரப்பினரையும் காவல் நிலையம் வரச்சொல்லி, காவல் ஆய்வாளர் சுகுமாறன் விசாரணை நடத்தினார்.

2) விசாரணை முடித்து, இருவரும் சர்வேயருக்கு பணம் கட்டி, இடத்தை அளவீடு செய்து, பிரச்சினை இல்லாமல் இருக்கும்படி அறிவுரை சொன்னார். அதன் அடிப்படையில் தங்கதுரை மட்டும் சர்வேயருக்கு பணம் கட்டினார். பணம் கட்டிய பிறகு தாலுகா சர்வேயர் இடத்தை அளவீடு செய்ய வந்தார். அளவீடு செய்ய வந்த முதல் நாளில், சர்வே கல் இல்லை என்பதால், ஆசைத்தம்பி GPS கொண்டு வந்து அளக்குமாறு சொன்னார். அவர் கேட்டதற்கிணங்க, GPS கொண்டு வந்து இடத்தை அளந்தார்கள். இடத்தை அளந்து, சர்வேயர் அத்தை மட்டும் காண்பித்து சென்றார். அதன்படி, தங்கதுரையும் அவரது உறவினர்களும் கல் ஊன்ற சென்ற போது, ஆசைத்தம்பி தரப்பினர் தடுத்தார்கள். தடுத்த பிறகு, அவரது மாமாவான ஓய்வு பெற்ற சர்வேயர் அளந்த பிறகு, கல் ஊன்றினார்கள்.

3) கல் ஊன்றிய பிறகு, அதற்கான பணம் கேட்ட போது, பணத்தை கொடுக்கவில்லை. தங்கதுரை தரப்பினர் வேலி அடைக்கச்சென்றார்கள். அப்போது, ஆசைத்தம்பி மற்றும் அவரது தம்பி பிரபாகரும் மிரட்டி கொலைமிரட்டல் விடுத்தார்கள். காவல் நிலையம் சென்று புகார் செய்தோம். நானும் காவல் நிலையத்திற்கு அப்போது சென்றேன். ஆசைத்தம்பி அக்காவின் கணவர் மார்கண்டேயன் என்பவரும் அவரது சகோ3தரர் முத்துகிருஷ்ணன் என்பவர்கள் காவல் நிலையத்தில் வைத்து, என்னை மிரட்டினார்கள். பிரபாகரன் என்பவர் எனது

மைத்துனருக்கு போன் செய்து, " உனது அக்கா கணவர் ஒதுங்கி கொள்ள வேண்டும் என்றும் இல்லை என்றால் நான் காவல் நிலையத்தில் பணிபுரிவதால், அவர் மீது என்ன வழக்கு வேண்டுமானாலும் போடுவேன்" என்றும் மிரட்டியுள்ளார். காவல் நிலையத்தில் விசாரணை நடைபெறவில்லை. எந்தவொரு நீதியும் கிடைக்கவில்லை. அதனால், நீதி கிடைக்கவேண்டும் என்று நீதிமன்றத்தை நாடியுள்ளார்.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.**

**ஒப்பம்.என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII code of Criminal Procedure)
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**Cr.M.P.NO-362/2025**

## Examination of PW3

| Name | பாலமுருகன் | Age: | 35 |
|---|---|---|---|
| Father's name | கருப்பையா | Calling: | ஓட்டுநர் |
| Village | அரவம்பட்டி | Taluk | கந்தர்வக்கோட்டை |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 03.11.2025

முதல் விசாரணை

1) கடந்த 21.10.2024 ஆம் தேதி, நான் புல் எடுக்க சென்றிருந்தேன். சத்தம் கேட்டு பார்த்த போது, தங்கதுரையை ஆசைத்தம்பி குடும்பத்தார் அடித்து கொண்டிருந்தார். அதனால், தங்கதுரை மயக்கம் போட்டுவிட்டார். அவரை கந்தர்வக்கோட்டை அரசு மருத்துவனைக்கு அழைத்து சென்றோம். அங்கிருந்து கந்தர்வக்கோட்டை காவல் நிலையத்திற்கு மருத்துவர் தகவல் சொன்னதன் பேரில், காவலர் செல்வம் மற்றும் மற்றொரு காவலர் வந்தாகள். சாயங்காலம், காவல் நிலையத்திற்கு வரச்சொன்னார்கள். இடப்பிரச்சினையாக இருப்பதால் சர்வேயருக்கு பணம் கட்டி அளந்து பிரச்சினையை தீர்த்து கொள்ளுமாறு சொன்னனார்கள். இருதரப்பினரும், சர்வேயருக்கு பணம் கட்ட சொன்னது தங்கதுரை மட்டும் சர்வேயருக்கு பணம் கட்டி அளந்தார். சர்வேயர் முதல் நாள் வந்த போது, சர்வே கல் இல்லாததால் , GPS கொண்டு வந்து அளக்குமாறு ஆசைத்தம்பி சொன்னார். அதன்படி சர்வேயர் GPS கொண்டு வந்து அளந்து குச்சி ஊன்றினார். கல் ஊன்றச்சென்ற போது, ஆசைத்தம்பி தரப்பினர் ஊன்றவிடவில்லை.

2) ஆசைத்தம்பியின் மாமா ஓய்வு பெற்ற சர்வேயர் மாணிக்கராஜ் என்பவர் இடத்தை அளவீடு செய்து, அவர் சொன்ன இடத்தில் கல் ஊன்றப்பட்டது. மறுநாள், கல் ஊன்றிய இடங்களில், வரப்பு கட்ட சென்ற போது, ஆசைத்தம்பி தரப்பினர் கட்டவிடவில்லை.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.**

**ஒப்பம்.என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII code of Criminal Procedure)
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**Cr.M.P.NO-362/2025**

## Examination of PW4

| | | | |
|---|---|---|---|
| Name | சந்தோஷ் | Age: | 24 |
| Father's name | முத்துக்குமார் | Calling: | விவசாயம் |
| Village | அரவம்பட்டி | Taluk | கந்தர்வக்கோட்டை |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 03.11.2025

முதல் விசாரணை

1) கடந்த 21.10.2024 ஆம் தேதி, காலையில், நான் வயலுக்கு தண்ணீர் பாய்ச்ச சென்ற போது, ஒரே சத்தமாக இருந்தது. ஆசைத்தம்பி குடும்பத்தார், தங்கதுரையை கட்டையால் அடித்ததால் அவர் மயக்கமாகிவிட்டார். அந்த இடத்தில் நானும் கருப்புசாமி, பாலன் ஆகியோர் இருந்தோம். தங்கதுரையை கந்தர்வக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கிருந்து கந்தர்வக்கோட்டை காவல் நிலையத்திற்கு தகவல் சொன்னதன் பேரில், செல்வம் மற்றும் மற்றொரு காவலர் வந்தார்கள். காவல் நிலையத்திற்கு, சாயங்காலம் வரும்படி சொன்னார்கள். காவல் ஆய்வாளர் சுகுமாறன் விசாரணை செய்து, இடப்பிரச்சினையாக இருப்பதால், சர்வேயருக்கு பணம் கட்டி அளவீடு செய்து பிரச்சினையை முடித்து கொள்ளுமாறு சொன்னார். தங்கதுரை சர்வேயருக்கு பணம் கட்டினார். சர்வேயர் இடத்தை அளக்க வந்தபோது, பொழி அந்த இடத்தில் இல்லை என்பதால் ஆசைத்தம்பி என்பவர் GPS மூலமாக அளக்க சொன்னார். GPS மூலம் அளந்து கல் போட சென்ற போது ஆசைத்தம்பி குடும்பத்தார் தடுத்து விட்டார்கள்.

2) அதன்பிறகு அவர் மாமா ஓய்வு பெற்ற சர்வேயர் வந்து, இடத்தை அளந்து கொடுத்துவிட்டார். அதன்படி வரப்பு போட சென்ற போது, ஆசைத்தம்பி மற்றும் பிரபாகரன், அவர் குடும்பத்தார் வரப்பு போட விடாமல் கெட்ட வார்த்தையால் திட்டினார்கள். உன்னால் என்ன பண்ண முடியும் என்று கேட்டார்கள். சண்டை வருவது போல் இருந்ததால், அனைவரும் வீட்டிற்கு சென்றுவிட்டோம். மறுநாள் காவல் நிலையம் சென்று, ஆசைத்தம்பி குடும்பத்தார் நிலத்தை அளவீடு செய்வதற்கு சர்வேயருக்கு பணமும் கட்டாமல், இடத்தை தவறாக அளவீடு செய்துள்ளதாக புகார் அளித்தோம். காவல் துறையில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.**

**ஒப்பம்.என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**